1987 ஏப்ரல் 24] [திரு. க. சோலைராசு]

வர்களைக் காப்பாற்றியதற்குப் பிறகு அந்த சடங்குகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைவுபடுத்துகிற ஒரு சுற்றறிக்கையையாவது அனைத்து மருத்துவமனைகளுக்கும் அரசு அனுப்புமா? இன்றைக்கு தனியார்களுக்கு முதலுதவி சிகிச்சைக்கான சான்றிதழ் வழங்கலாம் என்ற ஒரு உரிமை தனியார் மருத்துவமனைகளுக்கு நகரங்களில் ஆங்காங்கு ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் விபத்துக் காலங்களில் மற்ற அவசரக் காலங்களில் காயப் பட்டவர்களைத் தனியார் மருத்துவமனைகளில் பார்க்கலாம் என்று சொல்லி சில புகழ் பெற்ற மருத்துவமனைகளுக்கு சான்றி தழ் வழங்கப்படுமா? அதோடு ஆங்காங்கே விபத்துக் காலங்களில் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக காப்பாற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களால்கூட, அப்படிப்பட்ட முதலு தவி சிகிச்சை அளித்த பிறகு அவர்களை மற்ற மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்களா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே சட்டத்தைப் பற்றி பின்னால் தான் பார்க்க வேண்டும். முதலில் மருத்துவம் செய்யவேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அப்படி எங்காவது தவறாக இருக்கிறது என்றால் மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கலாம். தனியார்களுக்கு விபத்துக் களைப் பற்றி சர்ட்டிபிகேட் சான்றிதழ் கொடுக்கிற உரிமையை வழங்குவதில்லை. கொடுக்க முடியாது. காரணம் அது காவல் துறையில் இருந்து வாங்கவேண்டியது. அரசுத் துறையில் கொடுக்கப்படுகிற சான்றிதழ்களுக்கே சில நேரங்களில் சட்டப் பிரச்சினை வந்து நீதிமன்றத்தில் கேள்வி கேட்கிறபோது தனியார்ளுக்கு அந்த உரிமை வழங்கிவிட்டால் வேறு குழப்பம் ஏற்படும்.

(எ) ஜவ்வாது மலை புதூர் நாட்டிற்குப் போக்குவரத்து வசதி நிறுத்தப்பட்டது குறித்து.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''வடாற்காடு மாவட்டம் ஜவ் வாது மலை, புதூர் நாட்டிற்கு திருப்பத்தூரிலிருந்து இயங்கி வந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பேருந்து நிறுத்தப்பட்டதால் அப்பகுதி மலை வாழ் பழங்குடி மக்கள் படும் இன்னல்கள் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் துணை-தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 24

அறிக்கை.

திருப்பத்தூரிலிருந்து புதூர் நாட்டிற்கு மலைப் பாதையில் பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டது. ஆனால், தடுப்புச் சுவர்கள் கட்டப்பாடாததால் அத்தடத்தில் பேருந்து இயக்கப் பட்ட குறுகிய காலத்தில் இரண்டு பெரிய விபத்துக்கள் ஏற்பட்டு விட்டன. பாதுகாப்பற்ற நிலையில் அத்தடத்தில் பணிபுரிய ஊழியர்கள் அஞ்சுவதால், மேற்கண்ட தடம் இயக்குவது நிறுத் தப்பட்டுள்ளது.

தடுப்புச் சுவர்கள் மேற்கண்ட தடத்தில் கட்ட தக்க நட வடிக்கை எடுக்கும்படி வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவை கட்டி முடிக்கப் பட்டவுடன் பேருந்து இயக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது விவர அறிக்கையாக இல்லை. ஒரு சிறு குறிப்பாகத்தான் கொடுத்துள்ளார்கள். இது 15,000 மலை வாழ் மக்களுடைய பிரச்சினை. அங்கே மலைக்குச் செல்லுகின்ற சாலை 1982 ஆம் வருடத்திலேயேதான் போட்டு முடிக்கப்பட்டது. ஆனால் அதனுடைய அகலமே 6 மீட்டர் தான். தற்போதைய சாலைகள் எல்லாம் 7.50 மீட்டர் சாலை களாகப் போடப்படுகின்றன. இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நாங்கள் சொல்லி, அங்கு தடுப்புச் சுவர் அமைக்கவும் சாலைகளை அகலப்படுத்தவும் ரூபாய் 30 இலட்சத்திலே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கோவை நெடுஞ் சாலைத் துறை மலைப் பகுதி மேற்பார்வைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது குறித்து அமைச்சர் அவர்களுக்குத் தகவல் தெரியுமா? நெடுஞ்சாலைத் துறையைக் கவனிக் கிற அமைச்சரும் அவர்கள்தான் என்ற காரணத்தால் அதை விரைவாக முடிக்க ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாக விவரங்கள் தெரிந் தவர் என்ற காரணத்தால்தான் சிறிய குறிப்பாக இருந்தால் போதும், அவர் புரிந்து கொள்வார் என்பதற்காக வைக்கப்பட் டிருக்கிறது. அது ஓரளவுக்கு சிறு குறிப்பாக இருந்தாலும், அதிலே தெளிவாகவே இருக்கிறது. என்ன சொல்லியிருக்கிறார் கள் என்று சொன்னால், அங்கே இரண்டு விபத்துக்கள் ஏற் பட்டு விட்டன. குறுகிய பாதையாக, மலைப் பாதையாக இருக்கிறபோது, அதிகமாக விபத்துக்கள் ஏற்படக் கூடாது, அதை தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த வண்டிகளை நிறுத்த வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

1987 ஏப்ரல் 24] [திரு. சு. முத்துசாமி]

நல்ல வேளையாக, வண்டிகள் நிறுத்தப்பட்ட காரணத்தால், நீங்கள் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறீர்கள். விபத்துக்கள் பெரிதாக இருந்தால், ஒத்தி வைப்புத் தீர்மானமே நீங்கள் கொண்டு வர வேண்டிய நிலை ஏற்படும். எனவே, பெரிய பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை. ஏற்கனவே சாலையை விரிவு படுத்துவதற்காகவும்,பக்கச் சுவர் கட்டுவதற்காகவும் உள்ள தகவல்கள் முழுவதையும் நீங்கள் அறிந்து வைத்திருக்கிறீர்கள். அது எப்போது முடிகிறதோ, அது முடிந்தவுடனேயே அல்லது அதை விரிவு படுத்துவதற்கும் சேர்த்து நடவடிக்கை எடுத்து அந்த பக்கச் சுவர் கட்டி முடிக்கப்பட்டவுடனேயே இந்தப் பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், 1982 ஆம் வருடம்தான் அந்த சாலை போடப்பட்டது. அப்படி போடப்பட்ட சாலை குறுகிய சாலையாகப் போடப் பட்ட காரணத்தினால்தான், இன்று பேருந்துகள் இயக்கக் கூடிய நிலைமை இல்லாமல் இருக்கிறது. தவிர, அது மலைவாழ் மக்களுடைய பிரச்னையாக இருப்பதால்தான் நான் வலியுறுத்துகிறேன். அங்கு முக்கியமாக, நோயாளிகள் கீழே இருக்கின்ற திருப்பத்தூருக்கு வருகின்ற வசதி கூட இல்லை. நான் அதை இதற்கு முன்னமேயே கூட இந்தச் சபையில் சொல்லியிருக்கிறேன். நோயாளிகளைக் கட்டிலில் சுமந்து கொண்டு வந்து, நடைபாதை வழியாக கொண்டு வருகிற நேரங்களில் கூட, சில நோயாளிகள் இறக்கக் கூடிய சூழ்நிலையெல்லாம் இருக்கின்றன.

(முற்பகல் 11-30)

இதையெல்லாம் கருத்தில் கொண்டு, உடனடியாக அந்த மலைப் பாதையை அகலப்படுத்துவதற்கும் அங்கே தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற நிலைமை நிச்சயமாகவே வேதனைக்குரிய நிலைமைதான். எனவே எவ்வளவு விரைவு படுத்த முடியுமோ அந்த அளவுக்கு, அரசின் நிதிப் பிரச்சினையையும் மனதில் வைத்துத்தான் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. விரைவாகச் செய்ய நடவடிக்கை எடுக்கலாம் போடுகிற போதே அகலமாகப் பாதையைப் போட்டிருக்கலாம் என்கிற எண்ணம்தான் எனக்குக் கூட ஏற்படுகிறது. அப்படி அகலமாகப் போட்டாக வேண்டுமென்று முடிவெடுத்திருந்தாலும் கூட அந்தப் பாதையை அமைப்பதற்கே கூட காலதாமதம்

ஏற்பட்டிருக்கலாம். முதலில் குறுகலாகப் பாதையை அமைத்து விட்டார்கள். அதை அகலப் படுத்துவதற்கும் பக்கச் சுவற்றைக் கட்டுவதற்கும் சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவுறுத்தி விரைவான நடவடிக்கையை எடுக்கச் சொல்லலாம்.

(ஏ) சமயபுரம் அருகில் மாணிக்கபுரத்திற்கு இணைப்புப் பாலம்.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சமயபுரம் அருகேயுள்ள மாணிக்கபுரத்திற்கு இணைப்புப் பாலம் நீண்ட காலமாகக் கட்டப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியானது சமயபுரம் மாணிக்கபுரம் சாலையில் கி.மீ. 1/0ல் ஒரு உயர் மட்டப் பாலம் கட்டும் பணியாகும். இச்சாலை மணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இச்சாலையின் நீளம் 2.8 கி.மீ. ஆகும். இச்சாலை கி.மீ. 0/0-1/0 வரை செஞ்சரள் சாலையாகவும் கி.மீ. 1/0-2/8 வரை கற்சாலையாகவும் உள்ளது. இச்சாலையில் கி. மீ. 1/0ல் பெருவளை வாய்க்கால் குறுக்கிடுகின்றது. இந்த வாய்க்காலின் நீர் வழிப்பாதையின் அகலம் 12 மீட்டர்களாகும். இந்த இடத்தில் ஒரு உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கு உத்தேசமாக ரூ. 5.00 இலட்சங்கள் தேவைப்படும். பகுதி 2 திட்டத்தில் இனிவரும் காலங்களில் எடுத்துச் செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்ட பணித் தொகுப்புப் பட்டியலில் இப்பணியும் இடம் பெற்றுள்ளது.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையின் பகுதி 2-ல் தயாரிக்கப்படும் பணித் தொகுப்புப் பட்டியலில் இப்பணியைச் சேர்த்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காகப் புரட்சித் தலைவர் அரசுக்கும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.